30th July 1962]

கைத்தறித் துணிகள்

*792 கேள்வி.—திருமதி பி. கே. ஆர். லெட்சுமிகாந்தம் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஏராளமான துணிகள் தேங்கிக் கிடப்பதை எல்லாம் வாங்குவதற்காக ஸ்டேட் சொசைடி அரசாங்கத்தைக் கடன் ஏதேனும் கேட்டுள்ளதா ?

(இ) அப்படியானால், கடன் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையென்றால், காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir;

(b) Yes, Sir. Loan of Rs. 30 lakhs has been sanctioned so far to the State Society; and

(c) Does not arise.

திருமதி பி. கே. ஆர். லெட்சுமிகாந்தம் : ஸ்டேட் சொஸைட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், மதுரையில் தனலட்சுமி போன்ற சிறிய சொஸைட்டிகள் 6 மாத காலமாக ஸ்டேட் சொஸைட்டிக்குச் சென்று வேண்டிக் கொண்ட பிறகும்கூட, அங்கு தேங்கி யிருக்கிற துணிகளை இதுவரையிலும் எடுத்துக் கொள்ளவில்லை. அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் யோசனை கூறுவார்களா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : இந்தத் துணிகளை வாங்க வேண்டுமென்பதற்கு சர்க்கார் உத்தரவு போடுவது வழக்கம் இல்லை. ஸ்டேட் சொஸைடியே பார்த்து, நல்ல தரமுள்ள துணியாக இருந்தால் தான் வாங்குகிறார்கள். சில சொஸைட்டிகள் தரக் குறைவாக நெய்து விட்டு, அந்தத் துணிகளை வாங்க வேண்டுமென்று சொன்னால், அப்படி வாங்குவது கஷ்டமாக இருக்கும்.

திரு மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய கொள்கைதான் அங்கே நடைமுறையில் இருந்து வருகிறது என்று சொன்னால், எனக்கு ஆட்சேபணை இல்லை. 30 லட்சம் ரூபாய் அந்த சொசைட்டிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரைமரி சொஸைடிகளில் தேங்கிக் கிடப்பதை விற்பனை செய்வதற்காக இந்தக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் பொழுது, பிரைமரி சொசைடிகளிலே தரக் குறைவான துணியை வாங்கி, பின்னர் "அன்ஸோல்டு" என்று சொல்லி, தள்ளுபடி வாங்குவதற்காக அந்தக் கடன் வசதி பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : இந்த விஷயத்தை சொஸைட்டியின் போர்டு ஆப் டைரக்டர்களும், ஜெனரல் பாடியும் எடுத்துக் கொண்டு, அவர்களைக் கேட்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம்முடைய சட்டத்தின் கீழ் இயக்கக்கூடிய ஒரு சொஸைடிக்குப் பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து ரூபாய் 30 லட்சம் கொடுக்கிறோம். அப்படியிருக்கும்

பொழுது, அந்தப் பணம் சரியான முறையில் உபயோகிக்கப்பட்டு வருகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறதா, இல்லையா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : தனியாக கம்பிளெயின்ட் எழுதினால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. வை. சங்கரன் : பல கூட்டுறவு சொசைடிகளிலே தற்பொழுது துணிகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அதை வாங்குவதற்குச் சுமார் 1 கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொல்லப்படுகிறது. ஸ்டேட்சொசைடிக்கு ஒரு கோடி ரூபாய் சர்க்கார் கடன் கொடுத்தால், சமீபத்தில் தீபாவளி வருவதனால், எல்லாத் துணிகளும் செலவாகிவிடும். ஆகவே அதிகப்படியாகக் கடன் கொடுப்பதற்குச் சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த சொஸைடிக்கு எவ்வளவு பணம் தேவைப்படுகிறதோ, அதை அவ்வப்பொழுது கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஒரே அடியாக ஒரு கோடி ரூபாய் கொடுப்பது கிடையாது. முதலிலே ரூபாய் 15 லட்சம் கொடுத்தோம், பின்னர் ரூபாய் 15 லட்சம் கொடுத்தோம். இன்னும் தேவைப்பட்டால் அவ்வப்போது கொடுக்கப்படும். அப்படித் தேவைப்படுகிற தொகையைக் கொடுப்பதற்குச் சர்க்கார் தயாராக இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த வகையில் இந்த சொஸைடிகளுக்காக மொத்தம் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு? அதற்கு என்ன வட்டி? அந்தத் தொகையில் எவ்வளவு திருப்பித் தரப்பட்டிருக்கிறது? இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கிறது?

கனம் திரு ஆர் வெங்கட்டராமன் : "பீரியட் ஆப் டைம்" சொன்னால், பதில் சொல்ல முடியும்.

திரு. டி. கர்ச்சா கவுடர் : தேங்கிக் கிடக்கும் துணிகளிலே புகழ் பெற்ற "ப்ளீடிங் மெட்ராஸ்" என்ற துணியும் இருக்கிறதா? அவற்றிற்கு வெளி நாடுகளிலே இப்போது கிராக்கி இருக்கிறதா?

கனம் திரு ஆர் வெங்கட்டராமன் : இப்பொழுது "ப்ளீடிங் மெட்ராஸ்" வெகு வேகமாக விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது. தேக்கம் கிடையாது.

திருமதி பி. கே. ஆர். லெட்சுமிகாந்தம் : சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிறிய சொஸைடிகளில் இந்த மாதிரித் தேக்கம் இருந்து கொண்டிருக்கிறது. ஆறு மாத காலம் வரையிலும் துணிகளை வைத்துக் கொண்டு, மேற்கொண்டும் சொந்தமாக நடத்த வேண்டுமென்று சொன்னால் , இந்த சொஸைட்டிகளால் இயலாமல் இருக்கிறது. ஆகவே, அப்பேற்பட்ட சிறிய சொஸைட்டிகளில் இருக்கக் கூடிய துணிகளை எடுத்துக் கொள்ளுமாறு கனம் அமைச்சர் அவர்கள் ஸ்டேட் சொஸைட்டிக்கு ஆலோசனை கூறுவார்களா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : இதைப் பற்றிய முறையை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரணமாக, ஒரு சொஸைட்டி தங்களுடைய துணிச் சரக்குகளை வாங்கவேண்டு

30th July 1962]

மென்று சொன்னல், ஸ்டேட் சொஸைட்டிக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் ஏதாவது தவருன காரணங்களுக்காக, அதாவது "டிஸ்க்ரிமினேஷன்" என்ற முறையில், அந்த சொஸைடி வேண்டும். இந்த சொஸைடி வேண்டாம், அதனல் வாங்க மாட்டேன் என்று புகார்கள் இருக்குமேயானல், அதைப் பற்றிச் சர்க்காருக்கு எழுதினல் விசாரிக்க முடியும். ஆனல் ஒவ்வொரு சொஸைட்டியிலிருந்தும் வாங்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போடவேண்டுமென்று சொன்னல், அது சரியாக இருக்காது.

திருமதி பி. கே. ஆர். லெட்சுமிகாந்தம்: எந்தவிதமான தாக் குறைவும் சிறிய சொஸைட்டிகளில் இல்லை என்று நான் கருதுகிறேன். ஆனல் பணம் இல்லாத காரணத்தினல் ஸ்டேட் சொஸைட்டி எடுத்துக் கொள்ளவில்லை என்று அறிகிறேன். ஆகவே அந்தத் துணிகளையாவது இப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆலோசனையைக் கூறுவார்களா?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் கொடுக்கும் தகவல் சரியில்லை. சர்க்கார் பணம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிருர்கள். தேவைப்படும் எல்லாப் பணத்தையும் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிருர்கள். பணம் இல்லை என்பதற்காக வாங்கவில்லை என்று சொல்வது சரியல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பணமில்லை என்ற காரணம் இல்லை. நிர்வாகிகளுக்கு மனம் இருக்கவேண்டும். அப்பொழுது தான் அந்த சொஸைட்டிக்குப் பண உதவி செய்வார்கள். அதைத் தவிர்ப்பதற்கு, எந்தெந்த சொஸைட்டியிலே வாங்கி விற்பதிலே ஸ்டேட் சொஸைட்டிக்கு நஷ்டம் ஏற்படுகிறதோ, அந்த நஷ்டத்தை அந்தந்த சொஸைடியின் கணக்கிலே எழுதப்படுமா?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: இந்தத் துகணிளை வாங்கி விற்பதன் கொள்கை என்னவென்றல் மொத்தத்திலே இருக்கக் கூடிய தேக்கத்தைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான். அந்தந்த சொஸைட்டிகளிலே தேக்கம் ஏற்பட்டால், அந்தந்த சொசைட்டியே அந்த நஷ்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னல் அது ஒரு புதிய கொள்கை. அந்தக் கொள்கையைத்தான் அனுஷ்டிக்க வேண்டுமென்று சட்டசபை அங்கத்தினர்கள் மட்டும் சொன்னல் போதாது. சம்பந்தப்பட்ட சொசைட்டிகளும் விரும்பினல், சர்க்கார் இதைப் பரிசீலனை செய்யும்.

District Courts (Ramanathapuram and Madurai districts)

* 793 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to construct buildings for the district courts of Ramanathapuram and Madurai districts at Madurai City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir.